GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

**FA6A**

Register No. | | | | | | | | |

**6580–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five–year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the immunities and privileges of the Members of the Parliament and the State Legislative Assembly.

   நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகளை விவாதிக்கவும்

2. What are the different jurisdictions of the Supreme Court of India? Explain them.

   இந்திய உச்சநீதிமன்றத்திற்குரிய பல்வேறு ஆள்வரைகள் யாவை? அவைகளை விளக்குக.

3. Explain the provisions and effects relating to the proclamation of emergency under Article 352 of the Constitution of India.

   இந்திய அரசமைப்பின் 352வது ஷரத்தின் கீழ் நெருக்கடி நிலைமை தொடர்பான விதிகள் மற்றும் விளைவுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the ordinance making power of the President of India.

   இந்தியக் குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் உருவாக்கும் அதிகாரத்தைப் பற்றி விவாதிக்கவும்

5. Explain the composition and functions of Parliament.
பாராளுமன்றத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை விளக்கவும்

6. Examine the administrative relations between the Centre and the States.
மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நிர்வாக உறவுகளை ஆய்வு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Position and power of the Prime Minister
பிரதமரின் நிலை மற்றும் அதிகாரம்

(b) Impeachment of Supreme Court Judges
உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்கம்

(c) Writ of Mandamus
செயலுறுத்தும் நீதிப்பேராணை

(d) Article 370
ஷரத்து 370

(e) Doctrine of Repugnancy
முரண்பாட்டுக் கோட்பாடு

(f) Consolidated Fund of India
இந்திய அரசு தொகுப்பு நிதி

(g) Attorney General of India
இந்திய அரசு தலைமை வழக்குரைஞர்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்

8. 'X' an independent candidate from Ratnanagar Constituency won the elections with the support of the ruling party. But within a short time, due to differences of opinion with the party, he withdrew from the party and joined another party. As a result, he was disqualified under Anti–Defection Law. Discuss the validity of the disqualification under Anti–Defection Laws.

'X' என்ற சுயேச்சை வேட்பாளர் ரத்னநகர் தொகுதியிலிருந்து ஆளுங்கட்சி ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் சிறிது காலத்திலேயே, கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கட்சியில் இருந்து விலகி வேறு கட்சியில் சேர்ந்தார். இதனால், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். கட்சித் தாவல் தடைச் சட்டங்களின் கீழ் தகுதி நீக்கத்தின் செல்லுபடியாகும் தன்மையைப் பற்றி விவாதிக்கவும்

9. 'A' grows tea and transports to Karnataka through Assam. Assam State Legislature passed a law imposing taxes on goods carried by road and inland waterways. Is 'A' liable to pay tax?

'A', என்பவர் தேயிலை பயிரிட்டு அஸ்ஸாம் வழியாக கர்நாடகாவிற்கு கொண்டு செல்கிறார். சாலை மற்றும் உள்நாட்டு நீர்வழிகள் மூலம் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கும் சட்டத்தை அஸ்ஸாம் மாநில சட்டமன்றம் நிறைவேற்றியது. 'X' வரி செலுத்த கடப்பாடு உடையவரா?

10. The State Government of 'D' issues a notification creating a monopoly in an agency for manufacture, possession, sale and distribution of liquor as a beverage. The respondent challenges it as violative of the fundamental and constitutional right. Decide.

மதுபானம் தயாரித்தல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்வதற்கான நிறுவனத்தில் தனி உரிமையை உருவாக்கும் அறிவிப்பை 'D' மாநில அரசு வெளியிடுகிறது. இது அடிப்படை மற்றும் அரசமைப்பு உரிமையை மீறும் செயல் என எதிர்வாதி வாதிடுகிறார். முடிவு செய்யவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY LIBRARY

Register No. | | | | | | | | |

**FA6B**

**6774–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain briefly the various stages in the incorporation of a company and bring out the importance of the Certificate of incorporation.

   ஒரு நிறுவனத்தை பதிவு செய்யப்படுவதற்கான பல்வேறு நிலைகளை சுருக்கமாக விளக்குக. மேலும் நிறுவனப் பதிவு சான்றிதழின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்க.

2. Explain the Turquand rule.

   டர்குவாண்ட் விதியை விளக்குக.

3. Explain the provisions of the Companies Act for reconstruction and amalgamation of companies.

   நிறுவனங்களின் மறு அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பற்றிய நிறுவனச் சட்டத்தின் சட்ட வகை முறைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the rules of allotment of shares. What is the effect of an irregular allotment?

   பங்கு ஒதுக்கீட்டிற்கான பல்வேறு விதிகளைக் குறிப்பிடுக. முறைகேடான பங்கு ஒதுக்கீட்டிற்கான விளைவுகள் யாவை?

5. Explain the different modes of winding-up of a company.

   ஒரு நிறுவனத்தை கலைப்பதற்குரிய பல்வேறு முறைகளை விளக்குக.

6. "An auditor is a watch-dog but not a "blood-hound", comment and explain the power and duties of an Auditor.

"தணிக்கையாளர் ஒரு காவல் நாய் தானேயொழிய இரத்தவெறி பிடித்த வேட்டை நாயல்ல" என்னும் கூற்றை விமர்சித்து தணிக்கையாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Lifting the corporate veil

நிறுவனத்தின் திரைச்சீலை விலக்கப்படுதல்

(b) Floating charge

படரும் பற்று

(c) Company Law Appellate Tribunal

நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

(d) Kinds of meetings

கூட்டங்களின் வகைகள்

(e) Reduction of Share Capital

பங்கு மூலதனத்தின் குறைப்பு

(f) Derry vs Peek

டெர்ரி எதிர் பீக்

(g) Alteration of Articles of Association

செயல்முறை விதிகள் திருத்தம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ram, a minor, was registered as a shareholder in a company. After attaining majority he received dividends from the company. The company incurred loss and it was dissolved. Whether Ram is liable as contributory?

இராம் என்பவர் தான் இளவராக இருக்கும் போது ஒரு நிறுவனத்தின் பங்குநராகிறார். அதன் பின் உரிமை வயதடைந்தவுடன் நிறுவனத்திடமிருந்து தனக்குச் சேர வேண்டிய பங்காதாயத் தொகையைப் பெறுகிறார். நிறுவனம் இழப்புக்குள்ளாகி கலைக்கப்படுகிறது. இராம் பங்குக் கடப்பாளர் என்ற முறையில் பொறுப்புக்குள்ளாவாரா?

9. 'X', a director of a company, fails to attend three consecutive meetings of the Board without obtaining the leave of absence from the Board. Should 'X' vacate his office?

ஒரு நிறுவனத்தில் 'X' என்ற இயக்குநர் தான் வராமல் இருப்பதற்கு எவ்வித விடுப்பினையும் குழுமத்திடம் இருந்து பெறாமல் வரிசையாக மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளத் தவறுகிறார். 'X' தனது பதவியை இழப்பாரா?

10. Annual meeting of a company for 2012 was not held. But in 2013 a meeting for 2012 and 2013 was called and held. Is it legal and proper?

ஒரு நிறுவனத்தின் 2012ம் ஆண்டு வருடாந்தர பொதுக்கூட்டம் கூட்டப்படவில்லை. ஆனால் 2013-ம் ஆண்டில் 2012-ம் வருடம் மற்றும் 2013-ம் வருடத்திற்கும் சேர்த்து அழைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது. இது சட்டப்படி செல்லுமா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

FA6C

6581–25

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the powers of the Government to refer an industrial dispute for adjudication.

தொழிற்துறை சச்சரவுகளை கட்டாயத் தீர்ப்பு முறைக்கு சாட்டி அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. "The registered Trade Union is permitted to establish two kinds of funds for accomplishing its objectives under the Trade Unions Act, 1926". Explain.

"தொழிற்சங்கங்கள் சட்டம் 1926ல் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் இருவகைப்பட்ட நிதிகளை ஏற்படுத்தி அதன் நோக்கங்களை நிறைவு செய்து கொள்ளலாம் என அனுமதிக்கிறது." விளக்குக.

3. How the Payment of Wages Act, 1936 ensures the timely payment of wages with authorised deductions? Explain.

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம் அனுமதிக்கப்பட்ட கழிவுகளுடன் உரிய காலத்தில் ஊதியம் வழங்குதலை எவ்வாறு உறுதிப்படுத்துகிறது என்பதை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define closure and distinguish it from lock-out and lay-off.

மூடிவிடுதல் என்பதை வரையறை செய்து, அதனை கதவடைப்பு மற்றும் நிப்பாட்டி வைத்தல் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்துக.

5. State the procedure for fixing and revising minimum wages.

குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்தல் மற்றும் மாற்றி அமைத்தலுக்கான வழிமுறைகளைக் கூறுக.

6. Explain the salient features of the Industrial Employment (Standing Orders) Act, 1946.

தொழிற்பணி (நிலையாணைகள்) சட்டம், 1946ன் சிறப்பு அம்சங்களை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Collective Bargaining

கூட்டுப் பேரம்

(b) Wage Board

ஊதிய வாரியம்

(c) Authorised Deductions

அனுமதிக்கப்பட்ட பிடித்தங்கள்

(d) "Last come first go"

"இறுதியில் வருபவர் முதலில் செல்லும் விதி"

(e) International Labour Organisation

சர்வதேச தொழிலாளர் அமைப்பு

(f) Modification of Standing Orders

நிலையாணைகளைத் திருத்தம் செய்தல்

(g) Amalgamation of Trade Unions

தொழிற்சங்கங்களின் இணைப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An employer pays wages to his workmen which is less than the one fixed under the Minimum Wages Act, 1948. In reply to an action under the Act, he pleads that "the workmen have agreed to accept the wages and hence there is no violation." Decide.

பணி வழங்குநர் ஒருவர் தன் கீழ் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு, 1948–ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட ஊதியத்தை விட குறைவாகவே அளித்து வருகிறார். அச்சட்டத்தின் கீழ் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு "தொழிலாளர்களின் இசைவின் அடிப்படையிலேயே அவ்வாறு வழங்கி வருவதாகவும், அதனால் குறைவாகக் கொடுப்பது சட்டத்தின் கீழ் விதிமீறலாக கருத முடியாது" என்று வாதிடுகிறார். முடிவு செய்க.

9. The employer of a public utility service dismissed few workmen for their participation in an illegal strike without any enquiry. The dismissed workmen demanded reinstatement. Decide.

பொது பயன்பாட்டுச் சேவை ஒன்றின் பணியாண்மையர், சில தொழிலாளர்கள் சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள் என்று விசாரணை ஏதுமின்றி அவர்களை பணி நீக்கம் செய்தார். பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் தங்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோரினர். முடிவு காண்க.

10. A trade union spends its general fund for its political works. Is this activity valid? Decide.

ஒரு தொழிற்சங்கம் அதன் பொது நிதியை அரசியல் பணிகளுக்காக செலவு செய்கிறது. இந்தச் செயல் செல்லத்தக்கதாகுமா? முடிவு காண்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY